**<u>நீநீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உடுமலைப்பேட்டை.</u>**

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் நாள் வியாழட்கிழமை

<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 05/2019</u>

**in**

<u>குற்றவியல் பல்வகை மனு எண். 33/2026</u>

செல்வம் (எ) முத்துசாமி,
த/பெ. கருப்புசாமி,
4/99, காந்திபுரம், கணக்கம்பாளையம்,
உடுமலைப்பேட்டை தாலுக்கா.

...மனுதாரர்/எதிரி

/எதிரி/

சசிக்குமார்,
த/பெ. மனோகரன்,
2, அனுசம் நகர், நாச்சிமுத்து லே அவுட்,
உடுமலைப்பேட்டை தாலுக்கா.

...எதிர்மனுதாரர்/ புகார்தாரர்

இந்த மனுவானது 20.01.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு.C.சிதம்பரசாமி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.A. வேல்மணி, M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பின் வாதத்தைக் கேட்டறிந்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்த வரை இன்று இந்நீதிமன்றத்தால் வழங்கப்படும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் இந்த மனுவை குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 91–ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

**<u>1. மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ள மனு கீழ்க்கண்டவாறு :</u>**

(01.01) மனுதாரர் தனது மனுவில் புகார்தாரரரால் வருமான வரி அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2016 வடி 2017 வருடங்களுக்கான வருமான வரி கணக்கு நகல், புகார்தாரரால் பிரதாப், ரவிச்சந்திரன், வின்செண்ட் மற்றும் பிரதாப் மனைவி பிந்துமோல் ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை மோசடி வழக்குகளின் புகார் அலுவலக நகல் மற்றும் புகார்தாரரால் HDFC, ICICI, Axis Bank & கரூர் வைசியா வங்கியில் பெறப்பட்ட கடனை காட்டுவதற்குண்டான கணக்கு நகல் அல்லது வங்கி பாஸ்புத்தகம் ஆகிய ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்புவித்து சாட்சியம் அளிக்க தக்க உத்தரவுகள் பிறப்பிக்குமாறு மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளார்

**<u>2. எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை கீழ்க்கண்டவாறு :</u>**

(02.01) இம்மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிற மற்ற அனைத்தையும் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர்.

(02.02) கடந்த 22.08.2019 ஆம் தேதியன்று எதிர்மனுதாரர்/புகாரதாரர் தனது முதல் விசாரணையைப் பதிவு செய்துள்ளார் என்றும், அதன் பின்பு மனுதாரர்/எதிரி தரப்பில் கடந்த 28.09.2022, 13.03.2023, 02.05.2023 ஆகிய தேதிகளில் மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனுதாரர் புகார்தாரரிடம் ரூ.2,00,000/- பெற்று அதற்கு ஆதரவாக வழக்கு கசோலை Ex.P1 புகார்தாரரிடம் கொடுத்துள்ளதாகவும், இம்மனுதாரரைத் தவிர ஒரு வின்சென்ட், பிரதாப், பிந்துமோல், ரவிச்சந்திரன் ஆகியோருக்கும் வட்டிக்குக் கடன் கொடுத்து கந்து வட்டி கேட்டு மிரட்டியதாகவும், வழகடு நடத்தி மனுதாரர் தரப்பில் உடுமலைப்பேட்டை காவல் நிலைய CSR இரசீது எண்.769/2018 எதிரி தரப்பு முதல் சான்றாவணம் என்றும்,

பொன்ராஜ் என்பவர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எ.சா.ஆ.2 ஆகவும், பிந்துமோல் என்பவருக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த புகார் நகல் எ.சா.ஆ.3 ஆகவும், பிரதாப் என்பவருக்கு எதிராக புகார்தாரர் தாக்கல் செய்த புகார் நகல் எ.சா.ஆ.4 ஆகவும், ரவிச்சந்திரன் என்பவருக்கு எதிராக புகார்தாரர் தாக்கல் செய்த புகார் நகல் எ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

(02.03) மேலும் எதிரி தரப்பில் பல்வேறு சாட்சிகளையும் காவல்துறையினரையும் விசாரிக்க CMP No.2893/2023 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு இந்நீதிமன்றத்தால் தள்ளபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடோ சிராய்வு மனுவோ தாக்கல் செய்யவில்லை என்றும், எழுத்து மூலமான வாதுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி மனு எந்த விதத்திலும் ஏற்புடையதாக இல்லை, வேண்டுமென்றே காலம் கடத்துவதற்காக எவ்வித முகாந்திரமும் இல்லாமல் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று குறிப்பிட்டு மேற்படி மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்களும் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

**3. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 91–ன் கீழான இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே ஆகும்?**

(03.01) இம்மனுவின் அசல் வழக்கானது கடந்த 18.01.2019 ம் தேதியன்று நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு STC No.05/2019 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

(03.02) இந்நிலையில் வழக்காவணங்களைப் பரிசீலிக்கையில் எதிர்மனுதாரர்/புகார்தாரரின் தரப்பில் எழுத்து மூலமான வாதுரை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிற நிலையில், ஏற்கனவே இம்மனுதாரர் வங்கி மேலாளரை அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்து Crl.M.P. No.3893/2023 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு மேற்படி மனுவானது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்/புகார்தாரரால் இவ்வழக்கானது கடந்த 18.01.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் தற்போது வாதுரைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் இம்மனுவானது எதிரியான இம்மனுதாரால் கடந்த 20.01.2026 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(03.03) இந்நிலையில், புகார்தாரரரால் வருமான வரி அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2016 வடி 2017 வருடங்களுக்கான வருமான வரி கணக்கு நகல், புகார்தாரரால் பிரதாப், ரவிச்சந்திரன், வின்செண்ட் மற்றும் பிரதாப் மனைவி பிந்துமோல் ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை மோசடி வழக்குகளின் புகார் அலுவலக நகல் மற்றும் புகார்தாரரால் HDFC, ICICI, Axis Bank & கரூர் வைசியா வங்கியில் பெறப்பட்ட கடனை காட்டுவதற்குண்டான கணக்கு நகல் அல்லது வங்கி பாஸ்புத்தகம் ஆகிய ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்புவித்து சாட்சியம் அளிக்க தக்க உத்தரவுகள் பிறப்பிக்குமாறு வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் இம்மனுதாரர் புகார்தாரரிடம் ரூ.2,00,000/- பெற்று அதற்கு ஆதரவாக வழக்கு கசோலை Ex.P1 புகார்தாரரிடம் கொடுத்துள்ளதாகவும், இம்மனுதாரரைத் தவிர வின்சென்ட், பிரதாப், பிந்துமோல், ரவிச்சந்திரன் ஆகியோருக்கும் வட்டிக்குக் கடன் கொடுத்து கந்து வட்டி கேட்டு மிரட்டியதாகவும், வழக்கு நடத்தி மனுதாரர் தரப்பில் உடுமலைப்பேட்டை காவல்

நிலைய CSR இரசீது எண்.769/2018 எதிரி தரப்பு முதல் சான்றாவணம் என்றும், பொன்ராஜ் என்பவர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எ.சா.ஆ.2 ஆகவும், பிந்துமோல் என்பவருக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த புகார் நகல் எ.சா.ஆ.3 ஆகவும், பிரதாப் என்பவருக்கு எதிராக புகார்தாரர் தாக்கல் செய்த புகார் நகல் எ.சா.ஆ.4 ஆகவும், ரவிச்சந்திரன் என்பவருக்கு எதிராக புகார்தாரர் தாக்கல் செய்த புகார் நகல் எ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(03.04) இதனைப் பொறுத்து வழக்காவணங்களை பரிசீலிக்கையில் வருமான வரி அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2016 – 2017 வருடங்களுக்கான வருமான வரி கணக்கு நகல் தாக்கல் செய்ய மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள நிலையில் இவ்வழக்கு காசோலையானது கடந்த 28.09.2018 ஆம் தேதியன்று மனுதாரர்/எதிர்மனுதாரர் புகார்தாரருக்கு கொடுத்துள்ள நிலையில் 2016 –2017 வருடங்களுக்கான வருமான வரிகணக்கு தாக்கல் செய்யக் கோரியுள்ள காரணங்களை மனுதாரர் தரப்பில் தெளிவாக தனது மனுவில் குறிப்பிடவில்லை. மேலும், மனுதாரர்/எதிரியின் 14.11.2025 ஆம் தேதிய முதல் விசாரணையில் சசிகுமார் எனபவர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எ.சா.ஆ.2 ஆகவும், 17.08.2017 ஆம் ஆண்டு பிந்துமோல் என்பவர் மீது ரூ.20 லட்சத்திற்கு காசோலை கொடுத்து வசூலுக்கு பின்னிட்டு நீதிமன்றத்தில் டாக்டர் சசிகுமார் தாக்கல் செய்த புகார் நகல் எ.சா.ஆ.3 ஆகவும், நந்தி டெக்ஸ்டைல் உரிமையாளர் பிரதாப் என்பவர் மீது டாக்டர் சசிக்குமர் ரூ.1 கோடியே 72 லட்சத்து 91 ஆயிரத்து 520 காசோலை கொடுத்து வசூலுக்கு பின்னிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த புகார் நகல் எ.சா.ஆ.4 ஆகவும், ரவிச்சந்திரன் மீது ரூ.30 லட்சத்திற்கு நீதிமன்றத்தில் டாக்டர சசிகுமார் தாக்கல் செய்த பிராது நகல் எ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மேற்படி ஆவணம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ள

நிலையில் மீண்டும் குறியீடு செய்யப்பட வேண்டும் என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கும் வகையில் இல்லை.

(03.05) மேலும் புகார்தாரர் தனது முதல் விசாரணையை கடந்த 22.08.2019 ஆம் தேதி பதிவு செய்துள்ளார் என்றும், மனுதாரர்/எதிரி தரப்பில் கடந்த 28.09.2022, 13.03.2023, 02.05.2023 ஆகிய தேதிகளில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்று தனது எதிருரையில் கூறியுள்ள நிலையில், இம்மனுவில் எதிரியானவர் புகார்தாரரால் HDFC, ICICI, Axis Bank & கரூர் வைசியா வங்கியில் பெறப்பட்ட கடனை காட்டுவதற்குண்டான கணக்கு நகல் அல்லது வங்கி பாஸ்புத்தகம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்ய வேண்டும் என்று மனுதாரர்/எதிரியானவர் கோரியுள்ள நிலையில் இவ்வழக்கின் எதிர்மனுதாரர்/புகார்தாரரை 22.08.2019 ஆம் தேதியன்று முதல் விசாரணையும், 28.09.2022, 13.03.2023 மற்றும் 02.05.2023 ஆகிய தேதிகளில் மூன்று முறை இம்மனுதாரர் தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் எதிர்மனுதாரர்/புகார்தாரரின் குறுக்கு விசாரணையை பரிசீலிக்கையில் HDFC, ICICI, Axis Bank & கரூர் வைசியா வங்கியில் கடன் பெற்றதாக சாட்சியம் அளிக்கவில்லை.

(03.06) எனவே இவ்வழக்கான கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து சுமார் 07 வருடங்களாக நிலுவையில் இருந்து வருகிறது என்பதைக் கருத்திற்கொண்டும், அசல் வழக்கின் புகார்தாரரை இம்மனுதாரர் தரப்பில் ஏற்கனவே மூன்று முறை குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்பதைக் கருத்திற் கொண்டும், எதிரிக்கு இந்நீதிமன்றத்தால் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதைக் கருத்திற் கொண்டும் இம்னுவானது தள்ளுபடி செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**(03.07) இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.05 22:17:14 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.